முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.12.2022**, புதன்கிழமை

1. மக்களை ஞானவழித் தேற்றி
மாற்றம் செய்யவந்த அரங்கனே
ஆக்கமுடன் உன் பெருமை கூறி
அனுகூல ஆசிதனை பரமானந்தர் யானும்
2. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சுபகிருது சிலை திங்கள்
ஞானம்பட சஷ்டி திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் **06** ம் நாள் **21.12.2022**, புதன்கிழமை)
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்பெற கலிவாழ் மக்கள்
ஞான தேசிகனை நம்பிவர
வளமுடன் தேகமனோ பலமும்
வரமென பிறவி நோக்கமும்
4. நோக்கமும் அறிந்து தெளிந்து
நிலைத்தன்மை என்பதன்
ஆக்கமும் பக்குவமும் அடைந்து
அகிலத்தில் தேற்றம் காண்பர்
5. காண்கவே ஞான குருவரங்கன்
கருணைமிக்க வழிகாட்டலே
மேன்மைமிக்க ஆன்மீகமெனும்
மேலான எண்ணங்கள் உருவாகி
6. உருவாகி தரமற்ற சிந்தைகள்
ஊழல் பொய் களவு நிலை
உருவாகா மாயையில் அகப்படா
உண்மையானவர்களாகத் தேறி
7. தேறியே வாழ்வின் வெற்றிக்கு
தேவை என குருவருள் திருவருள்
அறிவினை தேடி ஆற்றலைகண்டு
அனைத்தும் அரங்கமகான் வழி
8. வழிதனில் அடைந்து நன்கு
வரமாகப் பெற்று சிறப்பர்
அழிவின் வழி செல்லா விலகி
ஆறுமுகக் கடவுள் மார்க்கம்
9. மார்க்கம் பற்றி மகிழ்ந்துமே
மனதுள் சரவணச் சுடரை
பார்த்து நிறுத்தி சுத்தி செய்து
பரிபக்குவ பரமானந்த நிலை

10. நிலையை தன்னுள் சோதித்து
நீதி குன்றா நடந்து வாழ்ந்து
பிழைபடா இல்லறம் நடத்தி
பெருமை தரும் தரும சேவை ஆற்றி

11. ஆற்றியே தருமவான் ஞானவான்
அடையாளம் தனை கூட்டி
மாற்றம் புரிவர் பேருலகினில்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–